# <u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.14.08.2020 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 14.08.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் 3 வது வார்டு பகுதியில் உள்ள போர்வெல் மின் இணைப்பு பழுதடைந்துள்ள 25எம்.எம். பைப், பியூஸ் கேரியர், போர்டு போன்ற பொருட்களை புதியதாக மாற்றியமைத்தல் பணிகள் மேற்கொள்ள நாள்.22.07.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.31.07.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு,

| வ. எண் | பொருள் | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | சரவணா பில்டர்ஸ், ஒட்டன்சத்திரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 7/20 Coil, Green Wire and 4 way rill | 271.00 | 275.00 | 284.00 |
| 2 | 25 mm PVC pipe | 42.00 | 45.00 | 48.00 |
| 3 | 25 mm PVC Bend | 11.00 | 12.00 | 15.00 |
| 4 | 63 Amps Fuse Carrier | 148.00 | 155.00 | 180.00 |
| 5 | 3 Phase Wood Board | 800.00 | 850.00 | 900.00 |
| 6 | 3 Phase Meter Board | 3480.00 | 3750.00 | 3780.00 |
| 7 | Labour Charge | 1500.00 | 750.00 | 775.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் எம்.எம்.கே..கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு எம்.எம்.கே.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 184**

**பொருள் 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18 வது வார்டு தாராபுரம் சாலை மேற்கு பகுதியில் புல எண். 311/1பி–ல் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ம.வ./ந.ஊ.இ.எண்.1435/1992 நாள்.10.11.1992–ல் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்ட பூங்கா இடத்தினை மாற்றி கிரையம் செய்வது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மேற்படி இடத்தை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவும், பத்திரவு பதிவு ரத்து செய்யவும், திரு.கே.வி.ராஜ்குமார், டாக்டர்.சின்னச்சாமி, திருமதி.ஜமுனா, திரு.சுப்பிரமணி, திருமதி.செல்வி, திரு.பாலகிருஷ்ணன் ஆகியோரால் நீதிமன்றங்களில் தடையாணை பெற வாய்ப்புகள் உள்ளதால், நகராட்சிக்கு தகவல் அளிக்கக் கோரி முன்னேற்பு மனு (Caveat) ஒட்டன்சத்திரம், பழனி மற்றும் திண்டுக்கல் ஆகிய உரிமையியல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்தமைக்காக அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கட்டணத் தொகை ரூ.50,000/– மட்டும் பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பூங்கா இடம் தொடர்பாக இடம் உரிமையாளர்களால் தடையாணை பெறுவதை தடுக்கும் பொருட்டு மூன்று நீதிமன்றங்களில் முன்னேற்பு மனு தாக்கல் செய்தமைக்கு வழக்கு கட்டணமாக வரப்பெற்ற பட்டியல் தொகையினை தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 185**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளில் உள்ள 176 ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளில் மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் எடுக்கப்படுகிறது.மேற்படி மோட்டர்கள் பழுது ஏற்பட்டால் உடனுக்குடன் பழுது பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு 09.07.2020–ம் நாளில் தனிஅலுவலர் அவர்கள் முன்அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 03.08.2020–ம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. கே.செந்தில்கண்ணன் | 0.13 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு. எம்.முத்துக்கண்ணன் | 2.10 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி வ.எண்.1–ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு. கே.செந்தில்கண்ணன் என்பவர் மதிப்பீட்டு விலையில் 0.13 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.13% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.செந்தில்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 709/2020/இ1)

**தீர்மானம் எண் – 186**

**பொருள் : 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சி குடிநீர் விநியோகத்தில் உள்ள 9 வது வார்டு பகுதி ஜி.டி லைன் தெரு மற்றும் திருவள்ளுவர் சாலைகளில் குடிநீர் செல்லும் பகிர்மான குழாய்களில் உள்ள சுலுஸ் வால்வுகள் 2 1/2“ மற்றும் 4” வால்வுகள் பழுதடைந்துள்ளது. அதனை உடனுக்குடன் புதிதாக வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.13,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. பொதுமக்களின் பொது நலன் மற்றும் குடிநீர் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 187**

**பொருள் –5**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காந்தி மார்க்கெட் சங்கம் சார்பாக, தங்கச்சியாம்மாபட்டி ஊராட்சியில் கட்டுமான பணிகள் மேற்கொள்வது தொடர்பாக திரு.ராஜசேகர் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.W.P(M.D)No.8115 of 2020 ஆக வழக்கு தொடுக்கப்பட்டு, நகராட்சியினை பிரதிவாதியாக சேர்த்து நடைபெற்ற வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை எதிர்கொண்டு தீர்ப்புரை நகல் பெற்றுக்கொடுத்தமைக்கான கட்டணமாக தொகை ரூ.12,500/– மட்டும் வழங்க கேட்டு நகராட்சி வழக்கறிஞர் திரு. பி.ஸ்ரீனிவாஸ் அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின்அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. வழக்கு மற்றும் தீர்ப்புரை ஆவணங்கள் கட்டணமாக வரப்பெற்ற பட்டியல் தொகையினை, நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 188**

**பொருள் : 6**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா–2019 நோய் தொற்று தடுப்பு பணிக்களான நகர் பகுதி முழுவதும் கிருமி நாசினி தெளிப்பது நகராட்சி பணியாளர்கள் அனைவருக்கும் முக கசவம் மற்றும் கையுறை வழங்குதல் மற்றும் செனிடேசர் போன்ற அத்தியாவசிய உபகரணங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் கொரோனா விழிப்புணர்வு தொடர்பாக பேனர்கள் வைத்தல் மற்றும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்ட பகுதிகளில் டின் சீட் கொண்டு அடைப்பது மற்றும் மருத்துவ பரிசோதனை நடத்துவது போன்ற அத்தியாவசிய பணிகள் 8/2020 மாதத்திற்கு கூடுதல் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.50 இலட்சம் தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரம் பொதுமக்களின் நலன் கருதி, மேற்படி அத்தியாவசிய நோய் தொற்று தடுப்பு பணிக்கு நிர்வாக அனுமதி பெற்று, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 189**

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி குடிநீர் விநியோகத்தில் உள்ள 9 வது வார்டு பகுதி ஜி.டி லைன் தெரு மற்றும் திருவள்ளுவர் சாலைகளில் குடிநீர் செல்லும் பகிர்மான குழாய்களில் உள்ள சலுஸ் வால்வுகள் 2 1/2“ மற்றும் 4” வால்வுகள் உடனுக்குடன் புதிதாக வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ள நாள்.07.08.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணி மேற்கொள்ள நாள்.12.08.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு,

| வ. எண் | பொருள் | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | சரவணா பில்டர்ஸ், ஒட்டன்சத்திரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | CI D/F Sluice valve with cap/ wheel as per IS14846 pn 1.0 with ISI marking – 65 mm | 5200.00 | 5300.00 | 5500.00 |
| 2 | CI D/F Sluice valve with cap/ wheel as per IS14846 pn 1.0 with ISI marking – 100 mm | 7710.00 | 7800.00 | 7900.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் எம்.எம்.கே..கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு எம்.எம்.கே.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 190**

**<u>பொருள் : 8</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ள புகை தெளிப்பு இயந்திரம் 2017–ல் கொள்முதல் செய்யப்பட்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது புகை தெளிப்பு இயந்திரம் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால், அதனை உடனுக்குடன் பழுது பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.30,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. பொதுமக்களின் பொது நலன் மற்றும் பருவ மழைக்காலம் ஆரம்பம் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 191</u>**

**<u>பொருள் : 9</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக கணிணி பிரிவிற்கு 2020–2021–ம் ஆண்டிற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் தகுதி வாய்ந்த ஐந்து நபர்களை பணி அமர்த்திக்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.97 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்டி பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 192</u>**

**<u>பொருள் : 10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தொழில் நுட்ப பிரிவிற்கு 2020–2021–ம் ஆண்டிற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்கள் பொது பணித்துறை விலை விகிதத்தில் தகுதி வாய்ந்த மூன்று நபர்களை பணி அமர்த்திக்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.20 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்டி பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 193</u>**

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2020–2021–ம் ஆண்டிற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் தகுதி வாய்ந்த ஐந்து நபர்களை பணி அமர்த்திக்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்டி பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 194**

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரம் மற்றும் குடிநீர் வாகன ஓட்டுநர்கள் 2020–2021–ம் ஆண்டிற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் தகுதி வாய்ந்த ஏழு நபர்களை பணி அமர்த்திக்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்டி பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சி விருப்பாட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2013–14ன் கீழ் குடிநீர் மேம்பாட்டு பணிகள் முடிவுற்று குடிநீர் விநியோகம் புதியதாக அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு இயந்திரங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி இயந்திரங்கள் இயக்க தேவையான பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத நிலையில் இயந்திரங்களை இயக்க 2020–2021–ம் ஆண்டிற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்கள் ஊதியம் பொது பணித்துறை விலைவிகிதத்தின் அடிப்படையில் தகுதி வாய்ந்த நான்கு நபர்களை பணியமர்த்தி கொள்ளவும் நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.30 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்டி பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ள புகை தெளிப்பு இயந்திரம் 2017–ல் கொள்முதல் செய்யப்பட்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது புகை தெளிப்பு இயந்திரம் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால், அதனை உடனுக்குடன் பழுது பணி மேற்கொள்ள நாள்.10.08.2020–ல் தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.14.08.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு,

| வ. எண் | பொருள் | பி.ஆனந்த் கொசு மருந்து, புகை மிஷின் சர்வீஸ் சென்டர், தேனி ரூ. | பிரைட் ஏஜென்சீஸ், கோயமுத்தூர் ரூ. | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஹாட்பைப் புதியது மாற்றி கார்ப்பரேட் ஜெட் சர்வீஸ் செய்ய 1 மெசினுக்கு | 13200.00 | 14000.00 | 14300.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் பி.ஆனந்த் கொசு மருந்து, புகை மிஷின் சர்வீஸ் சென்டர், தேனி நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு பி.ஆனந்த் கொசு மருந்து, புகை மிஷின் சர்வீஸ் சென்டர், தேனி நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 197**

**பொருள் : 15**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் தொலைபேசி செய்தி மற்றும் IEC மாதிரி பேனர் கொண்டு 74வது சுதந்திர தின விழாவை கொண்டாட அறிவுரைகள் வழங்கியதை தொடர்ந்து, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 74வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டவும், தூய்மை இந்தியா இயக்கத்தை வழுப்படுத்தும் வகையிலும் 74வது சுதந்திர தினத்தன்று IEC பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/–ஐ தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. 74வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டவும், தூய்மை இந்தியா இயக்கத்தை வழுப்படுத்தும் வகையிலும் 74வது சுதந்திர தினத்தன்று IEC பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தை SBM (IEC) பங்கு தொகை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 198**

**பொருள் : 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் 2020–21 ஆண்டுக்கான 23.06.2020 முதல் 14.08.2020 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0174 முதல் RF0291 முடிய, WS0024 முதல் WS0042 முடிய மற்றும் TFV017 முதல் TFV026 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**தீர்மானம் எண் – 199**